விடை—(அ) 33.

(இ) மீளும் செலவு—

	ரூ.
பணியாளர்கள்	72,000
தினப்படி	60,000
நோயாளிகளுக்கு உணவு	30,000
மருந்துகள்	52,000
இதர செலவுகள் (பெட்ரோல், வண்டி சத்தம், கூலி முதலியன).	32,000
மொத்தம் ..	2,46,000
மீளாச் செலவு	3,10,000

(உ) சுமார் 80,000 லிருந்து 1,00,000.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப் பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. நடைமுறைக் கேள்வி.

அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் குறித்து தகவல் கோரல்.

DR. H. V. HANDE : On a point of order, Sir. Under Rule 83, sub-rule (4), a point of order may be raised in relation to the business before the House at the moment. We are going to close our business tomorrow. The Business Advisory Committee also has not been scheduled to meet shortly. So, I would like to know whether the Hon. Chief Minister is going to give us a statement with regard to the Chidambaram incident. New facts, fresh facts have been published in the Press that One Perumalswami of Nellikuppam has identified the body as his son Uday Kumar, a third year B.Sc. (Maths.) student of the Annamalai University. I would like to know whether the Hon. Chief Minister is going to make a statement under Rule 82 or whether he would like to clarify this point?

(4) முதலமைச்சரின் விளக்க உரை

அண்ணாமலைப் பல்கலைக்கழக நிகழ்ச்சிகள் குறித்து.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, இதில் ஒழுங்குப் பிரச்சனை ஒன்றும் இல்லை. "ஸ்டேட்மெண்ட்" வைக்க வேண்டும் என்று வற்புறுத்த இயலாது. ஆனாலும் அவர்கள் கோரிய இந்தக் கோரிக்கையை நான் ஒரு வாய்ப்பாக வேண்டுமானால் பயன்படுத்திக்கொண்டு, 82-வது விதியின் கீழ் சில விளக்கங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

"அது மாணவரது பிணமல்ல" என்று கூறுவதற்கு இந்த அரசோ அல்லது அதிகாரிகளோ எந்த நேரத்திலும் முயற்சிக்கவில்லை. அதே நேரத்தில் இப்படிக் கண்டெடுக்கப்பட்ட உடல் ஒரு மாணவருடைய